கூடுதல் சார்பு நீதிமன்றம், தஞ்சாவூர்

முன்னிலை திரு. **M.** முருகன், **M.L.,**
முதன்மை சார்பு நீதிபதி, தஞ்சாவூர்
கூடுதல் சார்பு நீதிபதி, தஞ்சாவூர். (மு.கூ.பொ)

2023-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1-ஆம் நாள், புதன் கிழமை
(திருவள்ளுவராண்டு 2054 ஶ்ரீ சுபகிருது வருடம் மாசி மாதம் 17-ஆம் நாள்)

அசல் வழக்கு எண் **: 16 / 2019**

**CNR No : TNTJ03-000027-2019**

இளவர் ஜெயசீலன் ,
இவருக்காக இவரது இயற்கை காப்பாளர்
மற்றும் தந்தை மோகன்தாஸ் ... வாதி

- எதிர் -

1. கண்காணிப்பு பொறியாளர்,
தமிழ்நாடு மின்சார வாரியம்,
தஞ்சாவூர்.

2. உதவிப்பொறியாளர்,
இயக்குதலும் பராமரித்தலும்
தமிழ்நாடு மின்சார வாரியம்,
குறிச்சி. ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 02-02-2023 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்ததில் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.**N.**இளம்பரிதி அவர்கள் ஆஜராகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.**R.**சண்முகசுந்தரம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்,

தீர்ப்புரை

வாதிக்கு முதல் பிரதிவாதியானவர் இழப்பீடாக ரூ.6,00,000/-ஐ விபத்து நடந்த தேதியில் இருந்து 12% வட்டி மற்றும் வழக்கு செலவுத்தொகையையும் சேர்த்து நஷ்ட ஈடாக வழங்க கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1.** <u>வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம் :</u>

ஜெயசீலன் என்பவருக்கு ஏற்பட்ட மின் விபத்து சம்பந்தமாக நஷ்ட ஈடு கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், ஜெயசீலன் மைனராக உள்ளதினால் அவரின் தகப்பனார் மோகன்தாஸ் மைனரின் பாதுகாவலர் என்ற முறையில் இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பதாகவும், ஜெயசீலனுக்கு 9 வயது இருக்கும் போது கடந்த 27-10-2015 அன்று ஜெயசீலனும் மோகன்தாஸின் அக்கா மலர்க்கொடியும் இரவு 10.30 மணிக்கு மானியத்தெரு என்ற இடத்தில் கவனமாக நடந்து சென்று கொண்டிருந்த போது மணக்குடி வாய்க்கால் மதகு கட்டை அருகே தெரு விளக்கு இல்லை என்றும், அப்போது அங்கு இருட்டாக இருந்ததாகவும் அந்த இடத்தில் பிரதிவாதிகளுக்கு சொந்தமான மின்சாரம் கொண்டு செல்வதற்கான உயர்அழுத்த மின் கம்பி வழிபாதை இருந்தது என்றும், மின் கம்பி வழி பாதை பல மாதங்களாக முறையாக பராமரிப்பு செய்யப்படாமல் இருந்துள்ளது என்றும், அது அறுந்து ரோட்டில் கிடந்த நிலையில் ஜெயசீலன் மற்றும் மலர்கொடி ஆகிய இருவரும் இருட்டாக இருந்ததால் மின்சார கம்பியின் மீது மலர்க்கொடி கால் வைத்து விட்ட நிலையில் அவர் தூக்கி வீசப்பட்டுவிட்டார் என்றும், ஜெயசீலனும் அறுந்து விழுந்துக்கிடந்த மின் கம்பியில் கால் வைத்து விட்ட நிலையில் மின்சாரம் பாய்ந்து ஜெயசீலனுக்கு பாதிப்படைந்தார் என்றும் மலர்கொடி சம்பவ இடத்திலே இறந்து விட்டார் என்றும், ஜெயசீலனுக்கு பல இடங்களில் மின்சாரம் பாய்ந்து கொடுங்காயம் அடைந்து விட்டார் என்றும், எனவே ஜெயசீலனுக்கு ஏற்பட்ட கொடுங்காயமான எலும்பு முறிவு மற்றும் கண் பார்வை பாதிக்கப்பட்டு கண் இமை திறக்க முடியாமல் உள்ளதற்கு சிகிச்சை பெற்று இருப்பதாகவும், இதுநாள்வரையில் ரூ.2,00,000/-க்கு மேல் செலவு செய்து விட்டதாகவும் 24,000/-க்கு மருத்து பில்கள் தாக்கல் செய்திருப்பதாகவும், மின் விபத்தானது முறையாக மின் பாதையை பராமரிக்காமல் இருந்தது தான் காரணம் என்றும், இது குறித்து நஷ்ட ஈடு கோரி வாதி பிரதிவாதிகளுக்கு 08-01-2018 அன்று அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றும், எனவே தாவாவில் கண்ட தொகையை பிரதிவாதிகளிடமிருந்து நஷ்ட ஈடு வேண்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** <u>**2**ம் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை :</u>
<u>**(1**ம் பிரதிவாதி **2**ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையை அனுசரித்துள்ளார்**)**</u> **:**

வாதியின் வழக்கு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கது அல்ல என்றும், கடந்த 27-10-2015 அன்று விபத்திற்கு முன்பு மலர்க்கொடியும், ஜெயசீலனும் கவனமாக நடந்து சென்றதாக சொல்வது முற்றிலும் பொய் என்றும், பிரதிவாதிகளினால் முறையாக பராமரிக்கப்பட்டது என்றும், மின் பாதை இருந்ததாக சொல்வதும் முற்றிலும் பொய் என்றும், 27-10-2015 அன்று குறிச்சி பராமரிப்பிற்கு உட்பட்ட பகுதியில் பலத்த காற்றுடன் மழை பெய்த போது கண்ணார்குடி கிராமத்தில் உள்ள மின்மாற்றியின் தாழ்வழுத்த மின் பாதையின் அருகில் இருந்த மூங்கில் மரங்கள் சாய்ந்து தாழ்வழுத்த பாதையில் மின் கம்பிகள் இரண்டு அறுந்து விழுந்து விட்டன என்றும், வாதி நடந்து செல்லும் பொழுது பாதையை சரிவர

பார்க்க வேண்டியது வாதியின் கடமை என்றும், மின் கம்பிகள் அறுந்தது இயற்கையின் சீற்றத்தினால் ஏற்பட்ட செயல் என்றும் இந்நிலையில் பிரதிவாதிகளின் கவனக்குறைவினால் மின் விபத்து ஏற்பட்டதாக சொல்வது ஏற்கத்தக்கதல்ல என்றும், வாதி அனுப்பிய அறிவிப்பிற்கு பிரதிவாதிகளால் உரிய பதில் அனுப்பப்பட்டுள்ளது என்றும், வழக்கு சம்பவம் குறித்து திருப்பனந்தாள் காவல்நிலைய குற்ற எண்.306/2015-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், வாதி மற்றும் மலர்க்கொடியின் கவனக்குறைவினால் விபத்து நடந்துள்ளதினால் பிரதிவாதிகள் எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், எனவே வாதியின் தாவாவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

**3.** <u>எழுவினாகள் :</u>

1. Whether the plaintiff is entitled to compensation of Rs.6,00,000/- as prayed from defendants ?
2. To what relief, the plaintiff is entitled ?

**4.** வாதி தரப்பில் வா.சா.1 முதல் 3 வரை விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**5.** <u>எழுவினா எண்.**1 :**</u>

1. Whether the plaintiff is entitled to compensation of Rs.6,00,000/- as prayed from defendants ?

**5.1.** இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்டதின் அடிப்படையில் இந்நீதிமன்றம் இவ்வழக்கு கோப்பையும், வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.1 முதல் 11 ஆவணங்களையும் பரிசீலனை செய்ததில் 27-10-2015 அன்று ஏற்பட்ட விபத்து சம்பந்தமாக 28-10-2015 அன்று திருபனந்தாள் காவல்நிலைய குற்ற எண்.306/2015-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதையும், மேற்படி விபத்தில் மலர்கொடி என்பவர் இறந்திருப்பதையும், வாதி ஜெயசீலனுக்கு காயம் பட்டிருப்பதையும் குறித்து குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதையும் வா.சா.1-ன் மூலம் இந்நீதிமன்றம் அறிய முடிகிறது.

**5.2.** வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்ததில் வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி ஜெயசீலனுக்கு விபத்து ஏற்பட்ட போது 7 வயதாக இருப்பதையும், அதே போன்று ஜெயசீலனுக்கு ஏற்பட்ட காயங்களானது கொடுங்காயம் என்பதையும் இந்நீதிமன்றம வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்ததில் அறிய முடிகிறது.

**5.3.** வா.சா.ஆ.3 முதல் 6 வரையுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்ததில் வாதி தரப்பில் பிரதிவாதிகளுக்கு நஷ்ட ஈடு கேட்டு அறிவிப்பு கொடுத்திருப்பதையும், மேற்படி அறிவிப்புகளை பிரதிவாதிகள் பெற்றிருப்பதையும் இந்நீதிமன்றம் அறிய முடிகிறது. வா.சா.ஆ.8 ஆவணத்தை பரிசீலனை செய்ததில் வாதி ஜெயசீலனுக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சைபெற்று வாங்கப்பட்ட மருந்துகளின் விபரம் மற்றும் ஏற்பட்ட செலவினை தெரிவிக்கும் விதமாக ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வா.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள அனைத்து ரசீதுகளும் ஜெயசீலன் சிகிச்சைக்கு செலவு செய்யப்பட்டிருப்பதையும் அறிய முடிகிறது. எனவே மருத்துவ செலவாக ரூ.24,000/- இதுநாள் வரையில் செலவு செய்திருப்பதாக வாதி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது ஏற்கும் வகையிலே உள்ளது. வா.சா.ஆ.9, 10 ஆவணங்களை பரிசீலனை செய்ததில் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டிருப்பதையும், பதில் அறிவிப்பிற்கு உரிய பதிலை வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் மூலம் அனுப்பியிருப்பதையும் இந்நீதிமன்றம் அறிய முடிகிறது. இவ்வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலனை செய்ததில் 27-10-2015 அன்று இரவு மின் விபத்து ஏற்பட்டிருப்பதையும், மின் விபத்தில் மலர்கொடி என்ற நபர் இறந்திருப்பதையும், வாதி ஜெயசீலனுக்கு மின் விபத்தினால் காயங்கள் ஏற்பட்டிருப்பதையும் உண்மை என நிரூபிக்கப்பட்டுள்ளது.

**5.4.** வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் 11 வரை உள்ள ஆவணங்களின் மூலம் வாதி தரப்பு வழக்கை நிரூபித்துள்ள போதிலும், வாதி தரப்பு வழக்கிற்கு வலுவூட்டும் விதமாக வா.சா.2 யை இந்நீதிமன்றத்தில் முன்னிறுத்தி வாதி தரப்பு வழக்கை வாதியால் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் 28-10-2015 அன்று முதல் நாள் ஏற்பட்ட மின் விபத்து சம்பந்தமாக வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது என்பதையும், விபத்தானது மின்சாரம் தாக்கியதால் ஏற்பட்டது என புலன் விசாரணையில் தெரிய வந்ததால் மேல் நடவடிக்கை இல்லாமல் புலன் விசாரணை கைவிடப்பட்டதை நிரூபிக்கும் வகையில் வாதி தரப்பில் வா.சா.3 யை இந்நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்டுள்ளது.

**5.5.** பிரதிவாதிகள் தரப்பில் முன்னிறுத்தப்பட்ட பி.சா.1 விபத்தானது பிரதிவாதிகளின் கவனக்குறைவினால் ஏற்படவில்லை என்று தெரிவித்துள்ள போதிலும், பி.சா.1 தனது குறுக்கு விசாரணையில்,

“ பொதுவாக மின் கம்பி அறுத்து விழுந்தவுடன் தன்னிச்சையாக மின்தடை ஏற்பட வேண்டும் என்றால், சரிதான். அவ்வாறு மின்தடை ஏற்பட்டிருந்தால் ஒரு நபருக்கு உயிர் இழப்பும், இந்த வாதிக்கு காயம் ஏற்பட்டிருக்க வாய்ப்பும் இல்லை என்றால் சரியல்ல ”

என்று சாட்சியம் அளித்திருப்பதிலிருந்து இயற்கையின் சீற்றத்தினால் மூங்கில் மரங்கள் மின் கம்பம் மீது விழுந்த போதும், மின் கம்பம் அறுந்து விடும் நிலையில் உடனடியாக மின் தடை ஏற்பட வேண்டும் என்பது சரி என பி.சா.1 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். அவ்வாறு மின் தடை ஏற்படுவதற்கு முறையான கருவியை பொருத்தாததினால் இவ்வழக்கு விபத்து நடந்த அன்று மின் கம்பி அறுந்த போதும் மின்தடை ஏற்படவில்லை என்பதை இந்நீதிமன்றம் தெளிவாக அறிய முடிகிறது. எனவே 1, 2 பிரதிவாதிகள் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளில் செல்லும் மின் கம்பங்கள் அறுந்து விழும் நிலையில் முறையாக மின் தடை ஏற்படுத்தும் கருவியை பொருத்தியிருந்தால் இவ்வழக்கு விபத்து ஏற்பட வாய்ப்பு இல்லை என்ற காரணத்தினால் வாதி வழக்கில் கோரியுள்ளவாறு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**5.6.** இவ்வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 மற்றும் 8 ஆவணங்களை பரிசீலனை செய்ததில் வாதிக்கு இவ்வழக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்களானது நிரந்தரமாக தோன்றக்கூடிய காயங்களாக உள்ளதினால் வாதி விபத்தின் போது 7 வயது பூர்த்தி அடைந்திருப்பதை கருத்தில் கொண்டும், மேலும் வாதியின் மருத்துவ செலவை கருத்தில் கொண்டும், வாதியின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டும், இந்த வழக்கு விபத்தில் மின்சாம் பாய்ந்ததினால் வாதிக்கு பின்வரும் காலங்களில் ஏற்படக்கூடிய பின் விளைவுகளை கருத்தில் கொண்டும் வாதி தாவாவில் கோரியுள்ளவாறு ரூ.6 லட்சத்தை வாதிக்கு நஷ்ட ஈடாக பிரதிவாதிகள் கொடுக்க கடமைப்பட்டுள்ளார்கள் என 1 வது எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**6.** எழுவினா எண்.**2** **:**

2. To what relief, the plaintiff is entitled ?

வாதிக்கு தாவாவில் கோரும் அசல் பரிகாரம் கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் 1 வது எழுவினாவில் முடிவு செய்துள்ள நிலையில் வாதிக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரம் ஏதும் இல்லை என இந்நீதிமன்றம் 2 வது எழுவினாவிற்கு முடிவு காண்கிறது.

தீர்ப்பு பகரப்பட்டது. இறுதியாக 1ம் பிரதிவாதி நஷ்ட ஈடாக ரூ.6,00,000/-யும், அதற்கு தாவா தாக்கல் செய்த தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வட்டி மற்றும் தீர்ப்பு தேதியிலிருந்து வசூலாகும் தேதி வரை 6% வட்டியும், தாவா செலவு தொகையையும் சேர்த்து வாதிக்கு கொடுக்க வேண்டும் என இந்நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்தில் எடுத்து விரிவாக்கம் செய்து கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, **2023**ம் ஆண்டு மார்ச் மாதம் **1**-ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-(M.முருகன்)
கூடுதல் சார்பு நீதிபதி,
தஞ்சாவூர்.(மு.கூ.பொ.)

<u>சாட்சி மற்றும் சான்றாவணங்களின் பட்டியல் **:**</u>

<u>வாதி தரப்பு சாட்சி</u> :

வா.சா.1 - மோகன்தாஸ்

வா.சா.2 - ஜெயபால்

வா.சா.3 - ஷர்மிளா

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u> :

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 28-10-2015 | முதல் தகவல் அறிக்கை | நகல் |
| வா.சா.ஆ.2 | 28-10-2015 | தனியார் மருத்துவமனை விடுவிப்பு சான்று | உண்மை நகல் |
| வா.சா.ஆ.3 | 08-01-2018 | முதல் பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.4 | – | 1ம் பிரதிாவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசல் |
| வா.சா.ஆ.5 | 08-01-2018 | 2ம் பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.6 | 13-01-2018 | 2ம் பிரதிாவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை | நகல் |
| வா.சா.ஆ.7 | -- | இளவர் வாதியின் ஆதார் அடையாள அட்டை | ஒளி நகல் |
| வா.சா.ஆ.8 | -- | மருந்து பில்கள் 24,001/- | அசல் |
| வா.சா.ஆ.9 | 30-0-2018 | பிரதிவாதிகள் தரப்பில் வாதிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு | அசல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.10 | 08-02-2010 | வாதி தரப்பில் பிரதிவாதிகள் வழக்கறிஞருக்கு அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.11 | 10-02-2018 | பிரதிவாதிகளின் வழக்கறிஞர் வாதி பதில் அறிவிப்பை பெற்று கொணடதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை | அசல் |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :</u>

பி.சா.1- சிற்றரசன்

<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>

| | | | |
|---|---|---|---|
| பி.சா.ஆ.1 | 28-10-2015 | மின்பாதை ஆய்வாளர், உதவி மின் பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், குறிச்சிக்கு அனுப்பிய கடிதம் | உண்மை நகல் |
| பி.சா.ஆ.2 | 29-10-2015 | உதவி பொறியாளர் அளித்த விபத்து பற்றிய அறிக்கை | உண்மை நகல் |
| பி.சா.ஆ.3 | 29-10-2015 | விபத்து குறித்த கும்பகோணம் உதவி செயற்பொறியாளருக்கு அனுப்பிய ஆரம்ப பட்ட அறிக்கை | உண்மை நகல் |

ஒம்/-(M.முருகன்)
கூடுதல் சார்பு நீதிபதி,
தஞ்சாவூர்.(மு.கூ.பொ.)